[1979 மார்ச் 5

முத்துப்பேட்டை நகர சுத்தித் தொழிலாளர்கள்

*வினா எண். 236 — திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முத்துப்பேட்டை பேரூராட்சியில் பணியாற்றும் நகர சுத்தி தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்காததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு இது குறித்து முயற்சி ஏதேனும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) & (ஆ) ஆகஸ்ட் 78 முடிய பாக்கி இல்லாமல் சம்பளம் வழங்கப்பட்டு விட்டது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இந்தக் கேள்வியை நான் கேட்டு வெகு காலம் ஆகிவிட்டது. ஆகஸ்ட் 1978 முடிய பாக்கி இல்லாமல் சம்பளம் வழங்கப்பட்டு விட்டது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகஸ்டுக்குப் பிறகு செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர், பிறகு 1979 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் வந்தாகிவிட்டது. நகரசுத்தி தொழிலாளர்கள் என்றாலே பெருவாரியான பேரூராட்சிகள் சம்பளம் கொடுப்பதிலே காலம் கடத்துவதும் அரசு அலட்சியப் படுத்துவதுமாக இருக்கின்றது. அந்தக் குறிப்பிட்ட மாதத்திலேயே அவர்களுக்குச் சம்பளம் கிடைக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அரசு அலட்சியப்படுத்துகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து தவறான கருத்து என்று சொல்ல விரும்புகிறேன். அங்கே, முத்துப்பேட்டை பேரூராட்சியில் இரண்டு மாதத்திற்கு சம்பளம் நிறுத்தி வைக்கப் பட்டது. பின்னாலே அது கொடுக்கப்பட்டது. தற்பொழுது எந்த விதமான தாமதமும் இல்லாமல் தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. என் கிட்டப்பா : தலைவரவர்களே, நகரசுத்தித் தொழிலாளர்களுக்குப் பெரும்பாலும் சில இடங்களில் தள்ளு வண்டிகள் தரப்பட்டிருக்கின்றன, மலம் வாருவதற்கு. ஆனால், பல இடங்களிலே நகரசுத்தி தொழிலாளர்கள் தங்களுடைய தலையிலே மலத்தைச் சுமக்கக்கூடிய நிலை இன்னும்

இருந்துக் கொண்டிருக்கிறது. அதை மாற்றியமைத்து, அவர்களுக்கு எல்லாம் தள்ளுவண்டி வழங்கும் திட்டத்தினை முழுமையாகக் கொண்டுவர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனித் கேள்வீ போட்டால், விரிவான விடை அளிக்கப்படும்.

குடிசைப்பகுதிகளுக்கு மருத்துவ வசதி

* வினா எண். 237— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைவாசிகளுக்கு வீட்டு வாயிலிலேயே மருத்துவ வசதி செய்யப்படும் திட்டம் மாநிலத்தில் எங்கெல்லாம் செயல்படுகிறது ?

(ஆ) கோவை நகர குடிசை வாசிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) தமிழகத்தில் சில வட்டங்களில் இத்திட்டம் செயல்படுகிறது. தமிழகத்தின் மற்ற எல்லா வட்டங்களிலும் 1980–81ஆம் ஆண்டிற்குள் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

(ஆ) நகராட்சிகளுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த தற்போது உத்தேசமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இதே மாமன்றத்தில் அரசின் சார்பிலே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், குடிசைவாசிகளுக்கு, குடிசை வாசலிலேயே மருத்துவ வசதி வழங்கப்படும் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டிருப்பது அமைச்சரவர்களுக்கு ஞாபகம் உண்டா? எந்த எந்த இடங்களில் அமுலாக்கப்படும் என்று நான் குறிப்பாக கேட்டுள்ள இடங்களை அவர்கள் சொல்வார்களா? கோவை நகரத்தில், ஆயிரக்கணக்கான குடிசைகளில் ஒருபகுதியிலாவது உடனே இந்தத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள், குடிசை வாழ் மக்கள், நல்ல சுகாதார வாய்ப்பைப் பெற வேண்டும், நோயற்ற வாழ்வைப் பெற வேண்டுமென்பதற்காக நடமாடும் மருத்துவ மனைத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்ததும் வீட்டு வாசலி